ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2164/69 - 2020 පෙබරවාරි 28 වැනි සිකුරාදා - 2020.02.28
**2164/69 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை மாவட்டம் தங்கல்ல பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கு கிருவா பத்துவ சிறு பிரிவில் பொலொம்மாருவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.05.29 ஆம் திகதிய H/TNG/2019/101 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுக்கான எல்லைகள்;

*01.* **துண்டு A - வெஹெரகொடஹேன - விஸ்தீரணம்: சுமார் 0.2128 ஹெக்டயார்**

வடக்கு: அமரசிரி குணவர்தன சரத்சந்திர உரிமை கோரும் வெஹெரகொடஹேன; கிழக்கு: அமரசிரி குணவர்தன சரத்சந்திர உரிமை கோரும் வெஹெரகொடஹேன; தெற்கு : பிரெடி ராஜபக்ச உரிமை கோரும் மாரமண்டிய; மேற்கு: வீதி, அமரசிரி குணவர்தன சரத்சந்திர உரிமை கோரும் வெஹெரகொடஹேன.

எஸ். எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

எனது இல. : 4-3/ 9/ 2018/ CA/ 371.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர", இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, பெப்புருவரி 04.

03-601